தமிழகம் வறட்சி மாநிலம்: ஓ.பன்னீர்செல்வம் அறிவிப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன் மத்திய காலக் கடனாக மாற்றியமைக்க வழிவகை செய்யப்படும். இவ்வாறு மாற்றியமைப்பதற்கு தேவையான அன்னவாரி சான்றிதழ்கள் விரைந்து வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். கூட்டுறவு வங்கிகள் மூலம் 3,028 கோடி ரூபாய் பயிர்க் கடனாக இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் மத்தியகாலக் கடனாக மாற்றியமைக்கப்படும்.

4. தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால், இந்த வறட்சியிலிருந்து மக்களைப் பாதுகாக்க பெரும் பொருட்செலவு ஏற்படும். எனவே, மத்திய அரசின் நிதியுதவி கோரப்படும். அதற்கான வறட்சி நிவாரண கோரிக்கை மனு தயார் செய்யப்பட்டு, விரைவில் மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

நிவாரண தொகை

5. பேரிடர் நிவாரண வரையறையின்படி பயிர் சேதங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை உயர்த்தப்பட்டு 27.10.2015 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்படி 33 சதவீதத்திற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு, நிவாரண உதவித் தொகை வழங்கப்படும். நெல் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு, 5,465 ரூபாய்; நெல் தவிர, இதர நீர்ப் பாய்ச்சப்பட்ட பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5,465 ரூபாய்; மானாவாரி பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய்; நீண்ட கால பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 7,287 ரூபாய்; முசுக்கட்டை பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும்.

6. பயிர்க்காப்பீடு செய்த விவசாயிகள் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பயிர் இழப்புக்கான இழப்பீட்டுத் தொகையை பெற இயலும். அதற்கான பயிர் அறுவடை பரிv சோதனை விரைந்து மேற்கொள்ளப்படும்.

பேரிடர் நிவாரண வரையறைப் படி, நிவாரணம் மட்டுமே பெற இயலும் என்பதால், பயிர்க் காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் பயிர்க் காப்பீடு செய்ய தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. புதிய பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அதிக பயன் கிடைக்கும் என்பதால், அரசுக்கு செலவு அதிகம் என்றாலும், இந்த திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் சராசரியாக பயிர்க் காப்பீட்டிற்கு அரசின் பங்களிப்பு பிரிமீயம் தொகையாக 40 கோடி ரூபாய் மட்டுமே செலுத்தப்பட்ட நிலையில், இந்த ஆண்டு மாநில அரசின் பங்காக 410 கோடி ரூபாய் செலுத்தப்படுகிறது.

ஏக்கருக்கு ரூ.25,000

நெல் சாகுபடி செய்த விவசாயிகள், முழு பயிரிழப்பு அதாவது 100 சதவீத பயிரிழப்பு ஏற்பட்டிருந்தால் மாவட்டத்தைப் பொறுத்து, ஏக்கர் ஒன்றுக்கு 21,500 முதல் 26,000 ரூபாய் வரை காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து இழப்பீடு பெற இயலும். டெல்டா மாவட்டங்களைப் பொறுத்தவரை, இழப்பீட்டுத் தொகை 25,000 ரூபாய் ஆகும். டெல்டா மாவட்டங்களில் 80 சதவீத மகசூல் இழப்பு ஏற்பட்டிருந்தால், ஏக்கர் ஒன்றுக்கு 20,000 ரூபாய்; 60 சதவீத மகசூல் இழப்பு ஏற்பட்டிருந்தால், ஏக்கர் ஒன்றுக்கு 15,000 ரூபாய்; 33 சதவீத மகசூல் இழப்பு ஏற்பட்டிருந்தால் ஏக்கர் ஒன்றுக்கு 8,250 ரூபாய் பெற இயலும். இதர மாவட்டங்களைப் பொறுத்தவரை 33 சதவீதத்திற்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகள் மகசூல் இழப்பிற்கு ஏற்றபடி இழப்பீடு பெற இயலும். இதே போன்று, மற்ற பயிர்கள் பயிரிட்டு பயிரிழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளும், அந்தந்த மாவட்டங்களுக்கு குறிப்பிடப்பட்டுள்ள தொகையை இழப்பீடாக பெற இயலும். சோளப் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 20,000 ரூபாய் வரையிலும், பயறு வகைகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 12,000 ரூபாய் வரையிலும், கரும்புக்கு ஏக்கர் ஒன்றுக்கு 45,000 ரூபாய் வரையிலும், மஞ்சள் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 50,000 ரூபாய் வரையிலும் பயிரிழப்புக்கு ஏற்ப இழப்பீட்டுத் தொகை பெற இயலும்.

ஊரக வேலை உறுதித் திட்டம்

7. வறட்சி காரணமாக வேலை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களுக்கு, போதிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்படும்.

8. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் ஏரிகள் தூர் வாருதல், குளங்கள் சீரமைத்தல் மற்றும் பாசன வாய்க்கால்கள் தூர்வாருதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். இந்தப் பணிகள், 3400 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெறுவர்.

9. வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடை தீவனப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை வாயிலாக பசுந்தீவனம், அடர்தீவனம் மற்றும் உலர் தீவனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென 78 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

குடிநீர் வினியோகம்

10. வறட்சி காரணமாக நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

11. வறட்சி காரணமாக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

12. வறட்சி காரணமாக வன உயிரினங்கள் பாதிக்கப்படாமல் இருக்க, அவற்றுக்குத் தேவையான தீவனம் மற்றும் குடிநீர் ஆதாரத்தைப் பெருக்க 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

13. பொதுப்பணித் துறை மூலமாக நிலத்தடி நீர்த்தேக்கும் அமைப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்பு போன்ற நீராதாரங்கள் மேம்படுத்தும் பணிகள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

17 விவசாயிகளுக்கு தலா ரூ.3 லட்சம்

14. கடந்த இரண்டு மாதங்களில் 17 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். விவசாயிகளின் இந்த தற்கொலைகள் பல்வேறு காரணங்களுக்காக ஏற்பட்டிருந்தாலும், இறந்தவர்களின் குடும்ப நலன் கருதி அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

15. வறட்சி பாதிப்பு காரணமாக அதிர்ச்சியில் விவசாயிகள் உயிரிழந்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளி வந்துள்ளன. இது பற்றி விரிவான அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகள் கிடைக்கப் பெற்றபின், இறந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு தக்க நிவாரண உதவி வழங்கப்படும்.

இவ்வாறு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

பொங்கல் பண்டிகையையொட்டி

அரசு சிறப்பு பேருந்தில் பயணம் செய்ய 88 ஆயிரம் பேர் முன் பதிவு

சென்னை,ஜன.10–

பொங்கல் பண்டிகையையொட்டி இயக்கப்படும் அரசு சிறப்பு பேருந்தில் பயணம் செய்ய இதுவரை 88 ஆயிரம் பேர் முன் பதிவு செய்துள்ளனர்.

பொங்கல் பண்டிகைக்கு சொந்த ஊர் செல்லக் கூடியவர்கள் வசதிக்காக நாளை (11–ம் தேதி) முதல் 13–ம் தேதி வரை சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

சென்னையில் இருந்து 3 நாட்களுக்கு 11,270 சிறப்பு பஸ்கள் விடப்பட உள்ளது. பொங்கல் முடிந்து சென்னை திரும்ப வசதியாக 15, 16 மற்றும் 17ம் தேதிகளிலும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

சென்னையில் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் பேருந்துகள் செல்ல வசதியாக 5 பஸ் நிலையங்களில் இருந்து சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

நாளை முதல் 3 நாட்களுக்கு தமிழகம் முழுவதும் 17,693 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

அதன்படி, செங்குன்றம் வழியாக ஆந்திர மாநிலத்திற்கு செல்லும் அனைத்து தமிழக மற்றும் ஆந்திர மாநில பேருந்துகள், சென்னை அண்ணா நகர் மேற்கு, மாநகர போக்குவரத்துக் கழக பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் – இங்கிருந்து நாள் ஒன்றுக்கு 240 பேருந்துகள் என நாளை முதல் 13ம் தேதி வரை மொத்தம் 720 பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

கிழக்கு கடற்கரை சாலை வழியாக புதுச்சேரி, கடலூர் மற்றும் சிதம்பரம் செல்லும் பேருந்துகள், அடையாறு காந்தி நகரில் உள்ள மாநகர போக்கவரத்துக் கழக பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் – இங்கிருந்து, நாளை 138 பேருந்துகளும், நாளை மறுதினம் 146 பேருந்துகளும், 13ம் தேதி 151 பேருந்துகளும் என 3 நாட்களுக்கு மொத்தம் 435 பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

திண்டிவனம், விக்கிரவாண்டி வழியாக கும்பகோணம், தஞ்சாவூர் மார்க்கமாக செல்லும் அனைத்து வழித்தட பேருந்துகளும், தாம்பரம் சானிடோரியம் அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் – இப்பேருந்து நிலையத்தில் இருந்து, நாளை 190 பேருந்துகளும், நாளை மறுதினம் 230 பேருந்துகளும், 13ம் தேதி 240 பேருந்துகளும் என மொத்தம் 660 பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

பூவிருந்தவல்லி வழியாக ஆற்காடு, ஆரணி, வேலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மற்றும் ஓசூர் போன்ற ஊர்களுக்கு செல்லும் பேருந்துகள், பூவிருந்தவல்லி பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் இங்கிருந்து, நாளை 433 பேருந்துகளும், நாளை மறுதினம் 525 பேருந்துகளும், 13ம் தேதி 545 பேருந்துகளும் என 3 நாட்களுக்கு 1,503 பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன.

இதேபோல், மயிலாடுதுறை, நாகை, திருச்சி உட்பட மற்ற பிற ஊர்களுக்கு செல்லும் பேருந்துகள், கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் இப்பேருந்து நிலையத்தில் இருந்து, நாளை 2,068 பேருந்துகளும், நாளை மறுதினம் 2,913 பேருந்துகளும், 13–ம் தேதி 2,971 பேருந்துகளும் என மொத்தம் 7,952 பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

ஆக மொத்தம், சென்னையில் இருந்து அனைத்து மாவட்ட தலைநகரங்கள் மற்றும் பிற ஊர்களுக்கு வழக்கமாக இயக்கப்படும் 2,275 பேருந்துகளுடன், கூடுதலாக நாளை 794 சிறப்பு பேருந்துகளும், நாளை மறுதினம் 1,779 சிறப்பு பேந்துகளும், வரும் 13 ம் தேதி 1,872 சிறப்பு பேருந்துகளும் என 3 நாட்களுக்கு 11,270 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

மாநகர கூடுதல் பஸ்கள்

முன்பதிவு செய்த பயணிகள் அந்த பேருந்து நிலையங்களுக்கு செல்ல வசதியாக கூடுதலாக 250 மாநகர பேருந்துகளும் விடப்படுகிறது.

மாநிலத்தின் பிற ஊர்களில் இருந்து, நாளை 991 சிறப்பு பேருந்துகளும், நாளை மறுதினம் 2,291 சிறப்பு பேருந்துகளும், 13ம் தேதி 3,141 சிறப்பு பேருந்துகளும் என 3 நாட்களுக்கு 6,423 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

வழக்கமான பேருந்துகள் உள்பட சிறப்பு பஸ்களுக்கு முன்பதிவு கவுண்டர்கள் நேற்று திறக்கப்பட்டன. கோயம்பேடு பஸ் நிலையத்தில் 26 சிறப்பு கவுண்டர்களும், தாம்பரம் சானிட்டோரியம் பஸ் நிலையத்தில் 2 கவுண்டர்களும், பூந்தமல்லி பஸ் நிலையத்தில் ஒரு கவுண்டரும் திறக்கப்பட்டு முன்பதிவு செய்யப்படுகிறது.

சிறப்பு கவுண்டர்களில் நேற்று ஒரே நாளில் மட்டும் 5500 பேர் முன்பதிவு செய்துள்ளனர். இதில் 1750 பேர் சென்னையில் இருந்து பயணம் செய்ய முன்பதிவு செய்துள்ளனர்.

11, 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் பயணம் செய்ய இதுவரை மொத்தம் 88 ஆயிரத்து 193 பேர் முன்பதிவு செய்துள்ளனர். இதில் சென்னையில் இருந்து மட்டும் பயணம் செய்ய 61 ஆயிரத்து 553 பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

பிற ஊர்களிலிருந்து மற்ற இடங்களுக்கு செல்ல 26 ஆயிரத்து 640 பேர் முன் பதிவு செய்துள்ளனர்.

11–ந் தேதியில் பயணம் செய்ய 11,590 பேரும், 12–ந் தேதி அன்று பயணம் செய்ய 35 ஆயிரத்து 141 பேரும், 13–ந்தேதி பயணம் செய்ய 41 ஆயிரத்து 462 பேரும் முன் பதிவு செய்துள்ளனர்.

சென்னையில் இருந்து வழக்கமாக இயக்கப்படும் 2,275 பேருந்துகளுடன் சிறப்பு பஸ்கள் 794 சேர்ந்து மொத்தம் 3069 பஸ்கள் நாளை சென்னையின் 5 பஸ் நிலையங்களில் இருந்து இயக்கப்படுகிறது. முன்பதிவு செய்த பயணிகள் எந்த பஸ் நிலையத்தில் இருந்து ஏற வேண்டும் என்ற விவரம் பயணியின் செல்போனுக்கு எஸ்.எம்.எஸ். மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையத்திலும் முன்பதிவு குறித்த விவரங்களை கேட்டு அறிந்து கொள்ளலாம். இது தவிர கோயம்பேடு பஸ் நிலையத்தில் டிஜிட்டல் விளம்பர பலகையும் வைக்கப்படுகிறது. அதில் பயணிகளுக்கு தேவையான தகவல்கள் அறிவிக்கப்பட்டு கொண்டே இருக்கும். பொது மக்கள் எவ்வித சிரமமின்றி பயணம் மேற்கொள்ள அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

டெல்லியில் ரூ.6 லட்சம் மதிப்புள்ள ரூ.500, ரூ.2000 போலி நோட்டுகள் பறிமுதல்

புதுடெல்லி,ஜன.10–

டெல்லியில் ரூ.6 லட்சம் மதிப்புள்ள ரூ.500, ரூ.2000 போலி நோட்டுகள் சிக்கியது தொடர்பாக 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

பழைய ரூ.500, ரூ.1000 நோட்டுகள் ஒழிப்பைத் தொடர்ந்து அதற்கு பதிலாக புதிய ரூ.500, ரூ.2000 நோட்டுகளை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது. கள்ள நோட்டுகளை ஒழிப்பதற்காகவே பழைய நோட்டுகள் ஒழிக்கப்பட்டன. ஆனால் டெல்லியில் புதிய ரூ.500, ரூ.2000 நோட்டுகளும் போலியாக அச்சிடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

டெல்லியில் இன்று அதிகாலையில் போலீசார் ரோந்து சென்றபோது மர்ம நபர்கள் 2 பேர் சந்தேகத்தின் பேரில் பிடிபட்டனர். அவர்களிடம் சோதனை நடத்தியதில் ரூ.6 லட்சம் பணம் சிக்கியது.

அவை அனைத்தும் ரூ.500, ரூ.2000 நோட்டுகள் ஆகும். அவற்றை ஆய்வு செய்தபோது அனைத்தும் போலி நோட்டுகள் என தெரிய வந்தது. இதையடுத்து 2 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு அந்த போலி நோட்டுகள் எங்கிருந்து, எப்படி கிடைத்தது? அவர்களே அச்சடித்தார்களா? என்று பிடிபட்டவர்களிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

எம்.ஜி.ஆர். மன்றதுணைத்தலைவர், பொதுக்குழு உறுப்பினர் மறைவு: சசிகலா இரங்கல்

சென்னை, ஜன. 10–

எம்.ஜி.ஆர். மன்ற துணைத் தலைவர், பொதுக்குழு உறுப்பினர் ஆகியோர் மறைவுக்கு அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

தென் சென்னை வடக்கு மாபட்ட எம்.ஜி.ஆர். மன்ற துணைத் தலைவர் இ.ஏ.குப்புசாமி, கர்நாடக மாநிலம் சி.வி.ராமன் நகர் தொகுதி, கழகபொதுக்குழு உறுப்பினர் வி.கோவிந்தராஜ ரெட்டி ஆகியோர் உடல்நலக்குறைவால் மரணமடைந்துவிட்டனர் என்ற செய்தி கேட்டு வருத்தமுற்றேன்.

அன்புச் சகோதரர்கள் குப்புசாமி, கோவிந்தராஜ ரெட்டி ஆகியோரை இழந்து வாடும் அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு சசிகலா கூறியுள்ளார்.

கடைசி செய்தி

பொங்கலுக்கு கட்டாய விடுமுறை: மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, ஜன. 10–

கட்டாய அரசு விடுமுறை பட்டியலில் பொங்கல் பண்டிகையை மத்திய அரசு சேர்த்துள்ளது.

தமிழகத்தில் பரவலாக எழுந்த எதிர்ப்பு எதிரொலியாக மக்களின் உணர்வுகளுக்கு மத்திய அரசு பணிந்தது. இந்நிலையில் கட்டாய அரசு விடுமுறை பட்டியலில் மீண்டும் பொங்கல் பண்டிகையை சேர்த்துள்ளதாக இன்று பிற்பகலில் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தசரா விடுமுறைக்கு பதிலாக கட்டாய விடுமுறை பட்டியலில் பொங்கல் பண்டிகை இடம்பெற்றுள்ளது.

பெயர் மாற்றம்

A.P.MADHAN MOHAN, தந்தை பெயர்: A.M.Padmanabhan, பிறந்த தேதி: 14.09.1974, எண்.83/48, புதுபேட் தெரு, ஆலந்தூர், சென்னை – 600 016, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **A.P.MADAN MOHAN,** என்று அழைக்கப்படுகிறேன்.

A.P.MADHAN MOHAN

பெயர் மாற்றம்

SURESH KUMAR VELAMPATTI RAMADAS, தந்தை பெயர்: Ramadas, பிறந்த தேதி: 25.06.1986, எண்.11/213, ராமசுவாமி தெரு, வேலம்பட்டி கிராமம்,போச்சம்பள்ளி தாலுக்கா, கிருஷ்ணகிரி–635 204, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SURESH KUMAR RAMADAS,** என்று அழைக்கப்படுகிறேன்.

SURESH KUMAR VELAMPATTI RAMADAS

பெயர் மாற்றம்

KIRTI MEHTA, கணவர் பெயர்: Sundeep Jambu Kumar, பிறந்த தேதி: 17.09.1987, எண்.53, இருளப்பன் தெரு, சவுகார்பேட்டை, சென்னை–600 001, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **KIRTI BAFNA,** என்று அழைக்கப்படுகிறேன்.

KIRTI MEHTA

பெயர் மாற்றம்

B.ANTONY, தந்தை பெயர்: Babu Francis, பிறந்த தேதி: 07.12.1982, எண்.8/95, டேங்க் ரோடு, இருசாமநல்லூர், கினார், காஞ்சிபுரம் –603 303, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ANTHONY DHEYSUM,** என்று அழைக்கப்படுகிறேன்.

B.ANTONY

பெயர் மாற்றம்

பா.அந்தோணி, பெயர்:பாபு பிரான்சிஸ், பிறந்த தேதி: 07.12.1982, எண்.8/95, டேங்க் ரோடு, இருசாமநல்லூர், கினார், காஞ்சிபுரம் –603 303, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி அந்தோணி தேசம், என்று அழைக்கப்படுகிறேன்.

பா.அந்தோணி

பெயர் மாற்றம்

SYED AHMED BASITH, தந்தை பெயர்: Syed Ahmed, பிறந்த தேதி: 07.06.1976, எண்.1/55–A, ராயக்கோட்டை கிராமம் & அஞ்சல், தென்கனிகோட்டை தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் – 635116, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SYED AHMED SYED BASITH,** என்று அழைக்கப்படுகிறேன்.

SYED AHMED BASITH

பெயர் மாற்றம்

SETHUPATY KANDASAMY KARUPPASAMY, தந்தை பெயர்: Karuppasamy, பிறந்த தேதி: 11.06.1980, எண்.8, VGV நகர், கன்னடபாளையம் கிராமம், காமராஜ் நகர், ஆவடி, சென்னை–600 071, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SETUPATHI KARUPPASAMY RAMUAMMAL,** என்று அழைக்கப்படுகிறேன்.

SETHUPATY KANDASAMY KARUPPASAMY

பெயர் மாற்றம்

BASHEER AHMED, தந்தை பெயர்: Khaja Abdul Lathief, பிறந்த தேதி: 13.12.1964, எண்.25/13, ராமசாமி தெரு, 2வது மாடி, பெரியமேடு, சென்னை – 600 003, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **K.BASHEER AHAMED,** என்று அழைக்கப்படுகிறேன்.

BASHEER AHMED

பெயர் மாற்றம்

Sowmani Peedikavalappil Gopalakrishnan, தந்தை பெயர்: Gopalakrishnan, பிறந்த தேதி: 30.08.1980, எண்.5/3, சின்னப்ப தெரு 2வது மாடி, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SOWMINI GOPALAKRISHNAN,** என்று அழைக்கப்படுகிறேன்.

Sowmani peedikavalappil Gopalakrishnan

பெயர் மாற்றம்

P.PRAVEENA, பிறந்த தேதி: 08.02.2002, பு.எண்.75, ப.எண்.107, பஜனை கோவில் தெரு, சைதாப்பேட்டை ரோடு, வடபழனி, சென்னை – 600 026, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி **ப.பிரவீனாஸ்ரீ,** என்று அழைக்கப்படுகிறார்.

R.PADMANABAN, தந்தை

பெயர் மாற்றம்

THAYAGARAJAN, தந்தை பெயர்: Panchatram, பிறந்த தேதி: 1.1.1943, எண்.47, 1வது குறுக்கு தெரு, 2வது மெயின் ரோடு, சபரி நகர், போரூர், சென்னை–600 116, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **THIYAGARAJAN,** என்று அழைக்கப்படுகிறேன்.

THAYAGARAJAN

பெயர் மாற்றம்

P.THINESH KUMAR, தந்தை பெயர்: R.Padmanaban, பிறந்த தேதி: 12.01.1999, பு.எண்.75, ப.எண்.107, பஜனை கோவில் தெரு, சைதாப்பேட்டை ரோடு, வடபழனி, சென்னை – 600 026, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ப.தீபக்,** என்று அழைக்கப்படுகிறேன்.

P.THINESH KUMAR

பாஸ்போர்ட் காணவில்லை

இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் எனது ஒரிஜினல் பாஸ்போர்ட் எண். E 9162583 சென்னை ரீஜினல் பாஸ்போர்ட் அதிகாரி அவர்களால் 24.05.2004 அன்று வழங்கப்பட்டது. மேற்படி பாஸ்போர்ட் ஜெராக்ஸ் காபி எடுக்க சென்ற போது ஆதித்தனார் சாலை, புதுப்பேட்டை, சென்னை–600 002 டில் தொலைந்து விட்டது. இதை கண்டெடுத்தவர்கள் எனது கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

B.SARAVANAN,
S/o.BALAN,
நெ.55,தாமரை தெரு,
ராஜேஷ்வரி நகர்,
வல்லன்சேரி,
மறைமலை நகர்–603 202.
மொபைல்: 9094230195.

பெயர் மாற்றம்

MOHAMMED SALEEM ILYAS, தந்தை பெயர்: Mohammed Saleem, பிறந்த தேதி: 08.09.1992, எண்.20/NA, கண்ணபிரான் கோயில் தெரு, ஹஸ்தினாபுரம், சென்னை – 600 064, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MOHAMMED SALEEM MOHAMMED ILYAS,** என்று அழைக்கப்படுகிறேன்.

MOHAMMED SALEEM ILYAS

பெயர் மாற்றம்

CHELLAKUMAR MANI, தந்தை பெயர்: Mani, பிறந்த தேதி: 24.04.1981, ப.எண்.6/34, பு.எண்.13/275, எம்.ஜி.ஆர். தெரு, நேரு நகர், பொழிச்சலூர், சென்னை – 600 074, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SELVAKUMAR MANI,** என்று அழைக்கப்படுகிறேன்.

CHELLAKUMAR MANI

பெயர் மாற்றம்

Uma Maheswari Selvarathinam, கணவர் பெயர்: Magesh, பிறந்த தேதி: 17.12.1983, பிளாட் எண்.49, T.N.H.B. காலனி, சித்தாலப்பாக்கம், சென்னை – 600 126, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **UMA MAGESWARI,** என்று அழைக்கப்படுகிறேன்.

Uma Maheswari Selvarathinam

பெயர் மாற்றம்

PARANTHAMAN ANBU, கணவர் பெயர்: Sundararajan, பிறந்த தேதி: 01.01.1985, எண்.56, F1, முதல் மாடி, Rajas Garden, போரூர் Toll Plaza, வானகரம், சென்னை–600 095, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SUNDARARAJAN ANBBU SHRI,** என்று அழைக்கப்படுகிறேன்.

PARANTHAMAN ANBU

பாஸ்போர்ட் காணவில்லை

இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் எனது பாஸ்போர்ட் எண். L8321068 DOHA ரீஜினல் பாஸ்போர்ட் அதிகாரி அவர்களால் 22.9.2014 அன்று வழங்கப்பட்டது. மேற்படி பாஸ்போர்ட் தொலைந்து விட்டது. இதை கண்டெடுத்தவர்கள் எனது கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

G.KANAGARAJ,
நெ.6/C, வெள்ளுரன் நகர்,
பெரியகம்மியம்பட்டு,
ரெட்டியார் அஞ்சல்,
சோலார்பேட்–635851.

பெயர் மாற்றம்

VENKATACHALAPATHY PRABHAVATHI, கணவர் பெயர்: Sreedhar, பிறந்த தேதி: 10.05.1974, எண்.B–102, சிவ அனுகிரஹா, சிப்காட் ஹவுசிங் காலனி, தர்கா, ஒசூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் – 635126, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **VENKATACHALAPATHY PRABHAVATHY,** என்று அழைக்கப்படுகிறேன்.

VENKATACHALAPATHY PRABHAVATHI

பெயர் மாற்றம்

P.RAVI, தந்தை பெயர்: K.S.Pachiappan, பிறந்த தேதி: 27.01.1962, GD, அமர் சுந்தரம் அபார்ட்மெண்ட், எண்.11, டேங்க் தெரு, யுனைடேட் இந்தியா காலனி, கோடம்பாக்கம், சென்னை – 600 024, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **P.RAVIVARMA,** என்று அழைக்கப்படுகிறேன்.

P.RAVI

பெயர் மாற்றம்

VEEMA MOHAMMED ABBAS, கணவர் பெயர்: Mohammed Abbas, பிறந்த தேதி: 04.04.1984, எண்.31, திருமுருகன் நகர், மாதவரம், சென்னை –600 060, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **VAZIRA MOHAMMED ABBAS,** என்று அழைக்கப்படுகிறேன்.

VEEMA MOHAMMED ABBAS

பெயர் மாற்றம்

ANUMITHA ANAND, பிறந்த தேதி: 27.11.2004, ப்ளாட் எண்.6/1, 1வது மாடி, AP Navarathna Flats, சீதக்காதி சாலை, முகப்பேர் கிழக்கு, சென்னை –600 037, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி **VARSHA ANAND,** என்று அழைக்கப்படுகிறார்.

ANAND,
தந்தை

பாஸ்போர்ட் காணவில்லை

இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் எனது ஒரிஜினல் பாஸ்போர்ட் எண். J 0444273 சென்னை ரீஜினல் பாஸ்போர்ட் அதிகாரி அவர்களால் 09.08.2010 அன்று வழங்கப்பட்டது. மேற்படி பாஸ்போர்ட் எனது வீட்டிலிருந்து ஜெராக்ஸ் காபி எடுக்க சென்ற போது முக்தருன்னிசா பேகம் மெயின் தெரு, சென்னை–600 002 டில் தொலைந்து விட்டது. இதை கண்டெடுத்தவர்கள் எனது கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

IBRAHIM SHARIEF,
S/O.DAWOOD SHERIF,
நெ.51/23, முக்தருன்னிசா பேகம்
மெயின் தெரு, எல்லிஸ் ரோடு,
சென்னை–600 002.
மொபைல்: 7338762813.

ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB
CIN:L29299TN1987PLC058738
பதிவு அலுவலகம் : எண் 13, 3வது பிரதான சாலை,
அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100
இ-மெயில்: investor.relations@esab.co.in

அறிவிப்பு

SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள், 2015, நிபந்தனை 47 மற்றும் நிபந்தனை 29ன் படி டிசம்பர் 31, 2016 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிப்பதற்கு கம்பெனியின் இயக்குனர் குழுக் கூட்டம் **பிப்ரவரி 9, 2017 வியாழக்கிழமை** அன்று பதிவு அலுவலகத்தில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன அறிவிப்பு கம்பெனியின் www.esabindia.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனங்களின் www.bseindia.com மற்றும் www.nseindia.com என்ற இணையதளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இயக்குனர் குழுவின் சார்பாக
சென்னை **S. வெங்கடகிருஷ்ணன்**
10 ஜனவரி, 2017 நிறுவன செயலாளர்

ஆட்கள் தேவை

செங்கல்பட்டில் உள்ள எங்களது பிரபல ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு தொழிலாளர் நல அதிகாரி (WELFARE OFFCER) கல்வி தகுதி MA, MSW, MLM, MBA, BLM, வயது 25 முதல் 35 வயது வரை மேற்கூறிய தகுதியுள்ளவர்கள் தங்களது கல்வி சான்றிதழ், பாஸ்போர்ட் போட்டோவுடன் 7 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

PEARL GLOBAL INDUSTRIES LIMITED
No.51 Km Stone NH 45,
Paranur, Chettipunyam Village,
Chengalpat.

குற்றவியல் நீதித்துறை நடுவர்
எண்.2, நீதிமன்றம், சிதம்பரம்
C.M.P.No.5626/2016

திருமதி. காஞ்சனா, க/பெ.குருசாமி
நெ. 3/27, பரதூர் வடக்கு கிராமம்,
பரதூர் சாவடி அஞ்சல்,
சிதம்பரம் வட்டம்,
கடலூர் மாவட்டம். ..மனுதாரர்
–எதிர்–
வட்டாட்சியர், சிதம்பரம்
...எதிர் மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரருக்கும், அவரது கணவர் குருசாமி என்பவருக்கும் கடந்த 14.06.1995 தேதியில் மனுதாரரின் முகவரியான 3/27, பரதூர் வடக்கு கிராமம், பரதூர் சாவடி அஞ்சல், சிதம்பரம் வட்டம், என்ற முகவரியில் இரண்டாவதாக ஓர் ஆண் குழந்தை வீட்டிலேயே பிறந்த அவளுக்கு G.சௌமியா என்ற பெயரிடப்பட்டதாகவும், மேற்படி பிறப்பு எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிய விடுபட்டுள்ளதால் மேற்படி பிறப்பினை பதிய உத்திரவிடக்கோரி மனுதாரர் மனு செய்து, அது மேற்படி நம்பராகி வாய்தா எதிர்வரும் 27.01.2017 அன்று காலை 10.00 மணிக்கு வாய்தா வைக்கப்பட்டுள்ளது என்றும், இதில் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் மேற்படி வாய்தாவில் நேரிலோ, வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவேண்டியது. இல்லையெனில், வழக்குப்படி, மனுப்படி தீர்ப்பாகும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

ஜெ.ஜெயப்பிரகாஷ்,
வழக்கறிஞர்/ உறுதிமொழி
ஆணையர், 9, கச்சேரித் தெரு,
சிதம்பரம்